NOOLAHAM
FOUNDATION

# Digital Preservation at Eastern University (2017 - 2018)

www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | Digital Preservation at Eastern University (2017 - 2018) |
| செயற்றிட்ட எண் | NF/PG/2017/0005 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 2017 - 2018 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | கிழக்குப் பல்கலைக்கழகம், நூலக நிறுவனம் |

## நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## செயற்றிட்டச் சுருக்கம்

இச்செயற்றிட்டமானது கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள ஆவணங்களில் தெரிவு செய்யப்பட்ட சிலவற்றை எண்ணிமப்படுத்தலை நோக்காகக் கொண்டது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆவணங்கள் எண்ணிமப்படுத்தல் இதன் இலக்காகும்.

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனத்தின் கொள்கைகளோடு இசைந்த செயற்பாட்டுப் பன்மைத்துவம் மற்றும் ஆக்கப்பல்வகைமை ஆகியவற்றை அடைவதில் கிழக்கு சார்ந்த ஆக்கங்களின் ஆவணப்படுத்தல் முக்கியத்துவம் மிக்கதாகும். இத்தகைய செயற்பாடுகளில் பல்கைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், துறைசார் நிபுணர்கள் மற்றும் ஆவணப்படுத்தல் செயற்பாட்டாளர்களை பங்களிப்பாளர்களாகக் கொள்வது முக்கியமானதாகும்.

இந்த வகையில் கிழக்கின் கல்விச் சமுகத்தை தன்னிணைத்துக் கொண்டு அங்கு எற்கனவே உள்ள அறிவுச் சேகரத்தில் ஆவணங்களை எண்ணிமப்படுத்துதல் முக்கியமிக்கதாகவும் அடைவுச்செறிவுள்ளதாகவும் இருக்கும். இந்தப்பின்புலத்தில் கிழக்குப் பல்கலைக்கழக நூலக ஆவணப்படுத்தல் செயற்றிட்டம் திட்டமிடப்பட்டது.

## இலக்குகளும் நோக்கங்களும்

கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் சமூகங்களில் காணப்படுகின்ற ஆவணங்களை சேகரித்து எண்ணிமப்படுத்தலை நோக்கமாகக் கொண்டு இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## செயற்பாடுகள்

- கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தரின் அனுமதி பெறப்பட்டது
- நூலகருடனான இருவழித் தொடர்பாடலுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
- நூலக நிறுவனத்தின் சார்பில் ஒரு பணியாளர் நியமிக்கப்பட்டார்
- கிழக்குப் பல்கலைக்கழகம் சார்பில் ஒரு உதவி நூலகர் தொடர்பாளராக செயற்பட்டார்.
- ஆவணங்கள் அடையாளப்படுத்தப்பட்டு எண்ணிமப்படுத்தப்பட்டன.

## அடைவுகள்

- கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள ஆவணங்களை அவற்றின் பதிப்புரிமை அனுமதிகளுக்கு உட்பட்டு எண்ணிமப்படுத்தப்பட்டு பிரதிகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.
- கிழக்கு மாகாணத்தில் ஆவணங்களை எண்ணிமப்படுத்துவதற்கான தொடர்புகள் கிடைத்தமை.
- கிழக்கு மாகாணத்தின் செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அவர்களது ஆவணங்களை பெறமுடிந்தமை.

## எதிர்கொண்ட சவால்கள்

- ஓர் ஊழியர் மாத்திரம் செயற்பட்டமையால் வினைத்திறனோடு செயற்படமுடியாமை ஓர் சவாலாக அமைந்தது.
- கிழக்கு மாகாணத்தில் சமூக மட்டத்தில் ஆவணங்களைப் பெற முடிந்த போதும் அவற்றை பல்கலைக்கழகத்தினுள் எடுத்துச்சென்று மின்வருடுவதில் சிக்கல்கள் காணப்பட்டமை.
- நூலகத்தில் ஆவணங்களை எண்ணிமப்படுத்துவதற்கான அனுமதி இருந்தபோதும் வெளியில் பெறும் ஆவணங்களை கொண்டு சென்று எண்ணிமப்படுத்த முடியாமை.
- மேற்பார்வை முகாமை செய்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்பட்டமை.
- நூலக நிறுவனம் கொழும்பில் இருந்தமையால் உடனடித் தொடர்பாடல்களில் சிக்கல்கள் காணப்பட்டமை.

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- எண்ணிமப்படுத்திய ஆவணங்களுக்கான மூல அனுமதிப்பத்திரத்தை பல்கலைக்கழக நூலகம் கோரியிருந்தது. ஒரு பிரதி மட்டும் காணப்பட்டமையால் அதனை வழங்க முடியவில்லை. எதிர்காலத்தில் இத்தகைய விடயங்கள் செயற்றிட்டங்களைத் தொடங்க முன்னரேயே தீர்மானிக்கப்பட வேண்டும்.
- அரச நிறுவனங்களின் அதிகாரிகளின் அனுமதிகள் சில வேளைகளில் தற்துணிவின் அடிப்படையிலும் நன்நோக்கிலும் வழங்கப்படுகின்றன. நிருவாக மாற்றங்கள் ஏற்படும் போது இவை தொடர முடியாமல் போய்விடுகின்றன. (நூலகரின் மாற்றமும் தொடரமுடியாமல் போனமைக்குக் காரணமாகும்)
- சஞ்சிகை ஒன்றிலுள்ள கட்டுரைக்கான அனுமதி என்பது குறித்த கட்டுரையாளரின் அனுமதி அல்ல சஞ்சிகையின் பதிப்பாசிரியரின் எழுத்துமூல அனுமதி என்பது குறித்த விவாதமும் அதனை பல வெளியீடுகள் பின்பற்றவில்லை என்ற முன்வைப்பும் உரையாடப்பட்டது.